


03.06.2025

தலைப்பு செய்திகள்

- மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள அஸ்ஸாம் சிக்கிம் மாநிலங்களுக்கு தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி உறுதியளித்தார்.
- தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாட்டை உலக நாடுகளிடையே எடுத்துரைத்த திரு.பைஜெயந்த் பாண்டா தலைமையிலான அனைத்துகட்சி நாடாளுமன்ற குழு இன்று நாடு திரும்பியது.
- முன்னாள் முதலமைச்சர் மு.கருணாநிதியின் 102ஆவது பிறந்த தினத்தை ஒட்டி முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவரது நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தினார்.
- ஆன்லைன் விளையாட்டுக்களுக்கு ஆதார் இணைப்பை கட்டாயமாக்கி, தமிழக அரசு பிறப்பித்த விதிமுறைகள் செல்லும் என்று சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.
- இந்தோனேசிய மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் மகளிர் ஒற்றையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு பி.வி.சிந்து முன்னேறியுள்ளார்.

இனி விரிவான செய்திகள்

**********

பிரதமர்

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அஸ்ஸாம் மற்றும் சிக்கிம் மாநிலங்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் நிவாரணங்களையும் மத்திய அரசு வழங்கும் என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி உறுதியளித்தார்.

இவ்விரு மாநில முதலமைச்சர்களையும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பேசிய பிரதமர் தற்போதைய மழை வெள்ள நிலைமையை கேட்டறிந்ததோடு, மீட்பு நடவடிக்கைகளுக்கு உரிய உதவிகள் அளிக்கப்படும் என்றார்.

இதனிடையே அஸ்ஸாம் மாநிலத்தில் 22 மாவட்டங்கள், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நிலையில், ஆயிரத்து 250 வருவாய் கிராமங்களை நீர் முற்றிலும் சூழ்ந்துள்ளது.

12 ஆயிரத்து 600 ஹெக்டேர் பயிர்கள் சேதமடைந்துள்ளன.

சிக்கிம் மாநிலத்தில் நேரிட்ட மாபெரும் நிலச்சரிவில் லச்சென் பகுதி Chatan-இல் உள்ள ராணுவ முகாமை சேர்ந்த 3 வீரர்கள் உயிரிழந்தனர், காணாமல் போன 6 பேரை தேடும் பணிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

இப்பகுதியில் சிக்கி தவித்த சுற்றுலா பயணிகள் ராணுவ ஹெலிகாப்டர் மூலம் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர்.

**********

பிரதமர் - ஜம்மு காஷ்மீர்

ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேசத்தின் Chenab ரயில்வே மேம்பாலத்தை பிரதமர் வரும் 6ஆம் தேதி திறந்துவைக்கிறார்.

உலகின் மிக உயரமான இப்பாலம் ஜம்மு காஷ்மீரின் பெருமைமிகு சின்னமாகவும், புதிய இந்தியாவின் வலிமையையும், தொலைநோக்கு பார்வையையும் பிரதிபலிக்கும் வகையில் கட்டமைக்கப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் டாக்டர் ஜிதேந்திரசிங் தமது சமூகவலைதள பதிவில் கூறியுள்ளார்.

இயற்கை சீற்றங்களை எதிர்கொள்ளும் வகையில் கட்டமைக்கப்பட்டுள்ள இந்த பாலம் உத்தம்பூர், ஸ்ரீநகர், பாரமுல்லா, ரயில்வே திட்டத்தின் ஒருபகுதியாக அமைக்கப்பட்டுள்ளது.

**********

குடியரசு தலைவர்

லடாக் யூனியன் பிரதேச மக்களுக்கு 85 சதவிகித இட ஒதுக்கீடு அளிக்கும் வகையில், ஜம்மு காஷ்மீர் இட ஒதுக்கீடு திருத்த அவசர சட்டத்தை குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று கொண்டுவந்துள்ளார்.

லடாக் ஆட்சிமொழி சட்ட திருத்தம், லடாக் குடிமை பணி சேவை, லடாக் தன்னாட்சி மலைமேம்பாட்டு குழு ஒழுங்குமுறை திருத்தத்திற்கான அவசர சட்டங்களையும் குடியரசு தலைவர் பிறப்பித்துள்ளார்.

லடாக்கின் மொழி, கலாச்சாரம் உள்ளிட்டவற்றை பாதுகாக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி அப்பகுதி மக்கள் போராட்டங்களை மேற்கொண்டுவரும் நிலையில் லடாக் மக்களின் நலன்களை கருத்தில் கொண்டு இந்த அவசர சட்டங்கள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

**********

நாடாளுமன்ற குழு

தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாட்டை உலக நாடுகளிடையே எடுத்துரைத்த பிஜேபி உறுப்பினர் திரு.பைஜெயந்த் பாண்டா தலைமையிலான குழுவினர் இன்று நாடு திரும்பியுள்ளனர்.

அல்ஜீரியா, சவுதி அரேபியா, குவைத், பஹ்ரைன் நாடுகளில் வெற்றிகரமாக தங்களது பயணத்தை இக்குழுவினர் நிறைவு செய்துள்ளனர்.

திமுக உறுப்பினர் திருமதி கனிமொழி தலைமையிலான குழுவினரும்

ஐக்கிய ஜனதாதள் உறுப்பினர் திரு.சஞ்சய் குமார் தலைமையிலான குழுவினரும் இன்று தாயகம் திரும்புகின்றனர்.

திருமதி கனிமொழி தலைமையிலான குழு ரஷ்யா, லாட்வியா, ஸ்லோவேனியா, கிரீஸ், ஸ்பெயின் நாடுகளில் இந்தியாவின் நிலைப்பாடு குறித்து எடுத்துரைத்துள்ளது.

காங்கிரஸ் உறுப்பினர் திரு.சசிதரூர் தலைமையிலான குழு தனது பயணத்தின் இறுதி கட்டமாக இன்று அமெரிக்கா செல்கிறது.

தேசிய வாத காங்கிரஸ் சரத்பவார் கட்சி உறுப்பினர் திருமதி சுப்ரியா சுலே தலைமையிலான குழு எகிப்திலும்,

சிவ்சேனா உறுப்பினர் திரு.ஸ்ரீகாந்த் ஷிண்டே தலைமையிலான குழு லிபேரியாவிலும் அந்நாடுகளின் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளனர்.

தீவிரவாதத்திற்கு எதிரான பூஜ்ஜிய சகிப்புத்தன்மை குறித்த இந்தியாவின் வலுவான செய்தியை இக்குழுவினர் அனைவரும் தாங்கள் சென்ற நாடுகளில் எடுத்துரைத்ததோடு அதுதொடர்பான விளக்கங்களையும் வழங்கியுள்ளனர்.

**********

பெம்மசானி சந்திரசேகர்

அனைத்தையும் உள்ளடக்கிய வளர்ச்சியையும், மின்னணு பொருளாதாரத்தை மேம்படுத்தவும் பிரிக்ஸ் நாடுகள் டிஜிட்டல் பொது கட்டமைப்பை வலுப்படுத்துவதன் அவசியத்தை மத்திய தொலைதொடர்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் பெம்மசானி சந்திரசேகர் வலியுறுத்தியுள்ளார்.

பிரேசில் தலைநகர் பிரசிலியாவில் பிரிக்ஸ் தொலைதொடர்பு அமைச்சர்கள் கூட்டத்தில் உரையாற்றிய அவர் எதிர்கால மின்னணு வளர்ச்சிக்கான முன்னெடுப்பை அர்ப்பணிப்புடன் செயலாற்ற இந்தியா உறுதிபூண்டிருப்பதாக கூறினார்.

இந்நிகழ்வின்போது எல்லை தாண்டிய டிஜிட்டல் படைப்பாற்றல் திறன் மற்றும் நிலைத்தன்மையை மேம்படுத்துவதற்கான பிரகடனத்தை பிரிக்ஸ் நாடுகள் மேற்கொண்டன.

**********

நிர்மலா சீதாராமன்

நாட்டின் பொருளாதாரத்தில் வருவாய் புலனாய்வு இயக்குனரகம் முக்கிய பாதுகாப்பு அம்சமாக திகழ்கிறது என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

நாட்டின் வருவாய் புலனாய்வு இயக்குனரக தலைமையக கட்டிடத்தை புதுதில்லியில் இன்று துவக்கிவைத்து பேசிய அவர் கடத்தல், போதை பொருள் புழக்கம், போன்ற அச்சுறுத்தல்களிலிருந்து தேசத்தை இந்த அமைப்பு பாதுகாப்பதாக எடுத்துரைத்தார்.

நாட்டின் பாதுகாப்பு கட்டமைப்பை தாங்கி நிற்கும் அரணாக இந்த இயக்குனரகம் செயலாற்றுவதாகவும் குறிப்பிட்டார்.

**********

கருணாநிதி பிறந்த தினம்

மறைந்த தமிழக முன்னாள் முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதியின் 102ஆவது பிறந்த தினத்தை ஒட்டி சென்னை மெரினாவில் அன்னாரது நினைவிடத்தில் முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

செம்மொழி நாளாக இத்தினம் கொண்டாடப்படுவதை ஒட்டி சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்ற விழாவில் எழுத்தாளர் தாயம்மாள் அரவாணனுக்கு செம்மொழி தமிழ் விருதையும் முதலமைச்சர் வழங்கினார்.

அகவை முதிர்ந்த தமிழ் அறிஞர்களுக்கு உயர்த்தப்பட்ட உதவி தொகைக்கான ஒப்பளிப்பு ஆணைகளை அவர் அளித்தார்.

செம்மொழி நாளை ஒட்டி நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் வெற்றிபெற்ற பள்ளி கல்லூரி மாணாக்கருக்கு பரிசுகளையும் முதலமைச்சர் வழங்கினார்.

**********

முதலமைச்சர் நிவாரணம்

கன்னியாகுமரி மாவட்டம் குழித்துறை தாமிரபரணியாறு தடுப்பணையில் தவறி விழுந்த இருவரை காப்பாற்றுகையில் நீரில் மூழ்கி உயிரிழந்தவருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 10 லட்ச ரூபாய் வழங்க முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

உயிரிழந்தவர் குடும்பத்திற்கு தமது ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துள்ளார்.

**********

முதலமைச்சர்

ஈரோடு மாவட்டம் பெருந்துறை விஜயமங்கலத்தில் வேளாண் கண்காட்சி மற்றும் கருத்தரங்கை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் வரும் 11ஆம் தேதி தொடங்கிவைக்கிறார்.

வேளாண் பெருமக்கள் இதில் அதிக அளவில் பங்கேற்று பயன்பெறுமாறு மாநில வேளாண் உழவர் நலத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் கேட்டுக்கொண்டுள்ளார்.

**********

ஆன்லைன்

ஆன்லைன் விளையாட்டுக்களுக்கு ஆதார் இணைப்பை கட்டாயமாக்கி, நேர கட்டுப்பாடுகளை விதித்து தமிழக அரசு பிறப்பித்த விதிமுறைகள் செல்லும் என்று சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இதுதொடர்பான வழக்கை விசாரித்த நீதிபதிகள் எஸ்.எம்.சுப்ரமணியம், கே.ராஜசேகர் அடங்கிய அமர்வு ஆன்லைன் விளையாட்டுக்களை ஒழுங்குபடுத்த மாநில அரசுக்கு அதிகாரம் உள்ளதாக கூறியுள்ளது.

ஆன்லைன் விளையாட்டுக்கள் ஏற்படுத்தும் எதிர்மறை பாதிப்புகளை கருத்தில்கொண்டு இத்தகைய ஒழுங்குமுறை விதிகள் தேவைப்படுவதாகவும் நீதிபதிகள் தமது தீர்ப்பில் தெரிவித்துள்ளனர்.

**********

சிவசங்கர்

தமிழ்நாட்டில் அரசு பேருந்து கட்டணம் உயர்த்தப்படாது என்று மாநில போக்குவரத்து துறை அமைச்சர் திரு.எஸ்.எஸ்.சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

அரியலூரில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், அரசு பேருந்து கட்டணம் உயர்த்தப்படும் என்று வெளியாகும் செய்திகள் உண்மைக்கு புறம்பானது என்றார்.

தனியார் பேருந்து கட்டணம் தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

வாய்ஸ்

**********

முல்லை பெரியாறு

முல்லை பெரியாறு அணையை துணை கண்காணிப்பு குழுவினர் இன்று ஆய்வு மேற்கொண்டுள்ளனர்.

தேசிய அணைகள் பாதுகாப்பு ஆணைய தென்மண்டல இயக்குனரும், அணையின் துணை கண்காணிப்பு குழு தலைவருமான கிரிதர் தலைமையில் இந்த ஆய்வு நடைபெறுகிறது.

பிரதான அணை, பேபி அணை, மதகுகள், சுரங்கபாதை, கசிவு நீர், நீர்மட்டம் உள்ளிட்டவற்றை ஆய்வு செய்து பருவமழை காலங்களில் மேற்கொள்ள வேண்டிய பராமரிப்பு பணிகள் குறித்த ஆலோசனைகளும் இதில் வழங்கப்படும்.

இதுதொடர்பான ஆய்வறிக்கையை புதுதில்லியில் உள்ள தேசிய அணைகள் பாதுகாப்பு ஆணையத்தலைவர் திரு.அனில் ஜெயினிடம் இக்குழுவினர் சமர்ப்பிப்பார்கள்.

**********

இருவரி

திருச்சி திருவெறும்பூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனை பட்டாக்களை மாநில பள்ளிகல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழி இன்று பிற்பகல் வழங்குகிறார்.

நாமக்கல் - சேலம் தேசிய நெடுஞ்சாலையில் கருங்கல் பாளையம் பகுதியை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் உமா இன்று ஆய்வு மேற்கொண்டார்.

சாலை விதிகளை பின்பற்றாதவர்களுக்கு அபராதம் விதிக்க அவர் உத்தரவிட்டார்.

தர்மபுரி மாவட்டம் நல்லம்பள்ளியில் இன்று நடைபெற்ற வார சந்தையில் ஒருகோடி ரூபாய்க்கு ஆடுகள் விற்பனையாகியுள்ளன.

பக்ரீத் பண்டிகையை ஒட்டி ஆடுகளின் விற்பனையும் வரத்தும் அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

புதுக்கோட்டை மாவட்டம் ராங்கியம் வருவாய் கிராமத்தில் மக்கள் தொடர்பு முகாம் வரும் 11ஆம் தேதி நடைபெறுவதை ஒட்டி நாளைமுதல் பொதுமக்கள் கோரிக்கை மனுக்களை அளிக்கலாம் என்று ஆட்சித்தலைவர் திருமதி அருணா தெரிவித்துள்ளார்.

**********

உறுப்பினர் சேர்க்கை

திருப்பூர் மாவட்டத்தில் உள்ள வட்டார வளர்ச்சி அலுவலகங்களில் ஆதரவற்றோர் நல வாரிய உறுப்பினர் சேர்க்கை முகாம் நாளை தொடங்குகிறது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

**********

திற்பரப்பு

கன்னியாகுமரி மாவட்டம் திற்பரப்பு அருவியில் தண்ணீர் ஆர்பரித்து கொட்டுவதால் பிரதான அருவியில் சுற்றுலா பயணிகள் குளிக்க தடை நீட்டிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்.

**********

தண்ணீர் திறப்பு

திருநெல்வேலி மாவட்டம் பாபநாசம், அணையிலிருந்து கார்சாகுபடிக்காக இன்று தண்ணீர் திறக்கப்பட்டது.

122 நாட்களுக்கு திறக்கப்படும் இந்த தண்ணீரின் மூலம் நெல்லை தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள 46 ஆயிரத்து 786 ஏக்கர் நிலங்கள் பாசனவசதிபெறும்.

**********

ஒகேனக்கல்

கபிணி அணையிலிருந்து உபரிநீர் திறந்துவிடப்பட்டதை அடுத்து ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து இன்று வினாடிக்கு ஆறாயிரம் கன அடியாக அதிகரித்துள்ளது.

**********

பழனி

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில் வைகாசி விசாக திருவிழா இன்று கொடியேற்றத்துடன் தொடங்கியது.

**********

பேட்மிண்டன்

ஜகார்தாவில் நடைபெறும் இந்தோனேசிய மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் மகளிர் ஒற்றையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு இந்தியாவின் பி.வி.சிந்து முன்னேறியுள்ளார்.

முதல் சுற்றில் அவர் ஜப்பானின் Nozomi Okuhara –வை 22-20 21-23 21-15 என்ற செட்களில் வென்றார்.

ஆடவர் இரட்டையர் முதல் சுற்றில் ரான்கிரெட்டி, சிராக்ஷெட்டி இணை - இந்தோனேசிய இணையுடன் மோதுகிறது.

**********

கிரிக்கெட்

ஐ.பி.எல் 20-20 கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டத்தில் அஹமதாபாத்தில் இன்று இரவு ஏழரை மணிக்கு ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு - பஞ்சாப் கிங்ஸை எதிர்கொள்கிறது.

**********

மகளிர் கிரிக்கெட்

ஐ.சி.சி மகளிர் உலக கோப்பை ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டிகள் வரும் செப்டம்பர் 30ஆம் தேதிமுதல் நவம்பர் 2ஆம் தேதிவரை நடைபெறும் என்று இந்திய கிரிக்கெட் வாரியம் அறிவித்துள்ளது.

இந்தியாவிலும், இலங்கையிலும் நடைபெறும் இப்போட்டிகளில் இந்தியா ஆஸ்திரேலியா தென்னாப்பிரிக்கா நியூசிலாந்து இலங்கை பங்களாதேஷ் பாகிஸ்தான் நாடுகள் இதில் பங்கேற்கின்றன.

**********

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது

**********